**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 351/2002 c/w O.S. No. 107/2003**

Deposition of **P.W.-5** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 05.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பாலாஜி | Father's Name | : பழனிவேல் |
| Village | : தலைவாசல் | Taluk | : தலைவாசல் |
| Calling | : வட்டாட்சியர் | Age | : |

துவக்க நேரம் : 12.57 P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டது.

**வாதிகள் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**:

1) எனக்கு அனுப்பபட்ட அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் நான்காம் இலக்கமிட்ட ஆவணம் மட்டும் தற்பொழுது நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அந்த ஆவணமானது ச.எண்.72/3-ஐ ச.எண்.72/3-லிருந்து ச.எண்.72/17 வரை உட்பிரிவு செய்யப்பட்டு, அதில் உட்பிரிவுகள் 72/5, 72/9, 72/11 ஆகிய உட்பிரிவுகள் ரத்து செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களால் ந.க.எண்.479272004 தேதி30.07.2004-ன்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் ஆகும். மேற்படி ஆவணமானது **நீ.ம.சா.ஆ.6-ஆக** குறியீடு செய்யப்படுகிறது.மீதமுள்ள உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் ரத்து செய்யப்பட்டது தொடர்பான ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை.

2) ச.எண்.72/3-ல் மற்ற உட்பிரிவுகள் ரத்து செய்யப்பட்டதற்கான ஆவணங்களை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் மேற்படி சர்வே எண் தொடர்பாக அ பதிவேட்டில் உட்பிரிவுகள் ரத்து செய்யப்பட்டதற்கான பதிவுகள் இல்லை என்பதால் அது தொடர்பான ஆவணங்களை பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை. தற்பொழுது உள்ள பதிவேட்டில் ச.எண்.72/3 மற்றும் அதன் உட்பிரிவுகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ச.எண்.72/3 மட்டும்தான் கணினி அ பதிவேட்டில் உள்ளது. ச.எண்.72/3-ல் மற்ற உட்பிரிவுகள்

ரத்து செய்யப்பட்டதற்கான பதிவேடுகள் இல்லாத பட்சத்தில் அந்த உட்பிரிவுகளும் ரத்து செய்யப்பட்டதாகத்தான் கருத வேண்டும் என்றால் ஆவணங்களை பார்வையிடாமல் என்னால் பதில் சொல்ல இயலாது.மேலும் அது தொடர்பான பதிவுகள் அ பதிவேட்டில் இல்லை மற்றும் அது தொடர்பான ஆவணங்களும் எங்கள் அலுவலகத்தில் இல்லை.

எனக்கு அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற ஆவணங்கள் தொடர்பாக ஆட்சியர் அலுவலகத்திலும், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும் உள்ள ஆவணங்கள் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அவகாசம் வேண்டுகிறேன்.

முடிவு நேரம்: 01.20 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

sd/-D.Jansi Rani
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.351/2002 c/w O.S. No. 107/2003, Dt.05.08.2025.